அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்: 180/2016
தேதி: 26.11.2016

## கியூபா நாட்டின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோ மறைவு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.

90 வயது நிறைந்த புரட்சியாளரும், அரசியல் தலைவருமான கியூபா முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோ உடல் நலக்குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தி வருத்தம் அளித்தது.

பிடல் காஸ்ட்ரோ கல்லூரியில் படிக்கும்போதே அரசியலில் ஈடுபட்டு வந்தார். தன் பேச்சுத்திறமை மூலம் மக்களுக்கு புரட்சியை வெளிப்படுத்தியவர். புரட்சியின் மூலம் கியூபாவில் பொதுவுடைமையை நிலைநாட்டி ஆட்சியை பிடித்த இவர் 1959 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை கியூபாவின் பிரதமராகவும், 1976 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை அதிபராகவும் பதவி வகித்தவர். உலக தலைவர்களில் பிடல் காஸ்ட்ரோ தான் அதிக ஆண்டுகள் பதவி வகித்த தலைவர் ஆவர். கியூபாவில் இலவச கல்வியை அறிமுகப்படுத்தினார். சிறிய நாடாக இருந்தாலும் அதன் வளர்ச்சிக்கு வித்திட்டவர்.

கியூபா நாட்டின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோ மறைவிற்கு அந்நாட்டு மக்களுக்கும், அவரது தொண்டர்கள் மற்றும் ரசிகர்களுக்கும் என் சார்பிலும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆர் சரத்குமார்** B Sc.
தலைவர் – பொதுச்செயலாளர்